செ.வெ.எண். 415 நாள்.4.06.08

## தீவுத் திடலில் பனிமழை கொண்டாட்டம்
## கடைசி சில நாட்களுக்கு சலுகைக் கட்டணம்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் "ஸ்பெல்பவுண்ட்" என்னும் தனியார் நிறுவனத்துடன் இணைந்து சென்னை தீவுத்திடலில் முதன் முறையாக பனிமழை கொண்டாட்டம் என்னும் சிறப்பு நிகழ்ச்சியை மே 1ந் தேதி முதல் ஜுன் 1ந் தேதி வரை நடத்தியது.

இக்கண்காட்சியில் குழந்தைகள் பொழுது போக்கி மகிழ்ந்திட "குழந்தைகள் விளையாட்டு உலகம்" பிரத்தியோகமாக அமைக்கப்பட்டுள்ளதால் குழந்தைகளின் வருகை இக்கண்காட்சிக்கு அதிகமாக உள்ளது. மேலும் குதிரை சவாரி, சாரியட் சவாரி முதலியனவும் குழந்தைகள் குதுகலிக்கும் வகையில் அமைந்துள்ளது. இதுவரை இக்கண்காட்சியை 2 இலட்சத்திற்கும் அதிகமானோர் கண்டு களித்துள்ளனர். இந்நிகழ்ச்சியை காண வரும் பொது மக்களுக்கு மாநகர போக்குவரத்து கழகம் சிறப்பான போக்குவரத்து வசதி மற்றும் சிறப்பு பேருந்துகளை இயக்கி வருகிறது.

இந்த பனிமழைக் கொண்டாட்ட நிகழ்ச்சியை மேலும் நீடிக்குமாறு பொதுமக்களிடமிருந்து வந்த கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இக்கண்காட்சியை மேலும் ஒரு வாரம் நீடித்து ஜுன் 8ந் தேதி வரை நடத்தி வருகிறது.

**பனிமழைக் கொண்டாட்டத்திற்கு**
**ஜுன் 4 முதல் ஜுன் 8 வரை சலுகைக் கட்டணம்**

| ஏற்கனவே இருந்த கட்டணம் | சலுகைக் கட்டணம் |
|---|---|
| ரூ.150 பெரியவர் | ரூ.100 பெரியவர் |
| ரூ.100 சிறியவர் | ரூ. 50 சிறியவர் |

கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு கட்டணம் ரூ.50 மட்டுமே.

செயலர்,
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை.

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9